செய்தி வெளியீடு எண் : 52 நாள் :27.06.2020

**தேனி மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது :-**

*****

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (27.06.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள்** தெரிவித்ததாவது,

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (Covid-19) தாக்கம் அதிகரித்துள்ளதால், கொரோனா வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, கொரோனா நோய் தொற்றை தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு கடந்த 24.03.2020 முதல் அமலில் இருந்து வருகின்றது. மேலும், பொதுமக்களின் இயல்பு நடைமுறைகளை கருத்தில் கொண்டு, இடையில் சில நாட்கள் ஊரடங்கு உத்தரவில் சில தளர்வுகளை மேற்கொள்ள தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

தற்போது, வணிக சங்கங்கள், விவசாய சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் நலன் கருதி சில மாவட்டங்களில் தொற்று அதிகமாக தென்படுவதன் அடிப்படையில் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் இன்றைய தினம் வரை 513 நபர்கள் கொரோனா நோய் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்கள், சென்னையை சுற்றியுள்ள மாவட்டங்களிருந்து இருந்து வரும் நபர்களின் மூலமும், மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அதன்மூலம் அருகில் உள்ள மாவட்டங்களுக்கு சென்று வந்த நபர்களின் மூலமாகவும் கொரோனா தொற்று பரவி வருகிறது. அதனை கட்டுப்படுத்திடும் பொருட்டு, கடந்த (24.06.2020) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் மேற்கொண்ட காணொலிக்காட்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து மண்டலங்களுக்குட்பட்ட பேருந்து போக்குவரத்தினை தடை செய்திட கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், தற்சமயம் மண்டங்களுக்குட்பட்ட மாவட்டங்களுக்குண்டான பேருந்து போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

கேரளா மாநில எல்லைப்பகுதியில் நமது மாவட்டம் அமைந்துள்ளதால் கேரளா மாநிலத்திலிருந்து வருகை தருகின்றவர்களை கொரோனா வைரஸ் காய்ச்சல் தொடர்பாக, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தபடுவதற்கென லோயர்கேம்ப் பகுதியிலும், பிற மாவட்டங்களிலிருந்து வருகை தருகின்ற நபர்களுக்கு காட்ரோடு மற்றும் ஆண்டிபட்டி கணவாய் வாகன சோதனைச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், நமது மாவட்டத்தில் கொரோன நோய் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் அடிப்படையில், பெரியகுளம், தேனி-அல்லிநகரம், கம்பம், போடிநாயக்கனூர், கம்பம் மற்றும் கூடலூர் ஆகிய நகராட்சிப்பகுதிகளில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்று பரவி வருவதால், மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சிப்பகுதிகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடந்த (24.06.2020) அன்று மாலை 6 மணி முதல் 144 தடை உத்தரவு அமல் படுத்தப்பட்டுள்ளது.

அதில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட இனங்கள் மற்றும் அனுமதிக்கப்படாத இனங்கள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு, ஊடங்கள் மற்றும் பத்திரிக்கை செய்திகளின் வாயிலாக தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், குறிப்பாக கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் எவ்வித தளர்வுகளும் இன்றி முழுமையாக தொடரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள நகராட்சிப்பகுதிகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் அவர்களின் குடியிருப்பு பகுதிகளுக்கே சென்று விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோன வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக மாவட்டத்தில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் பரிசோதனை ஆய்வகத்தில் தினசரி நாளளொன்றுக்கு சராசரியாக 850-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் இன்றைய தினம் வரை தொற்று கண்டறியப்பட்டுள்ள 513 நபர்களில் **147** நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். **364** நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். நோய்தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வரும் நபர்களுக்கு தரமான, சத்தான உணவு, தேவையான பொருட்கள் ஆகியவைகள் வழங்கப்பட்டு, சுகாதாரம் பேணப்பட்டு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுபவர்களை சிகிச்சை மேற்கொள்வதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போடிநாயக்கனூர் பொறியியல் கல்லூரி மற்றும் வடபுதுப்பட்டியில் செயல்பட்டு வரும் தனியார் பொறியியல் கல்லூரி, தொழில் நுட்ப கல்லூரியில் படுக்கை வசதி, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி, கொரோனா சிகிச்சை பிரிவு தொடங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விபரங்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை, உணவு முறைகள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தினந்தோறும் என்னிடம் தகவல் தெரிவித்து சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இக்கூட்டத்தின் வாயிலாக காவல்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளனர். அவர்களின் பணி பாராட்டுக்குறியதாகும். அதே சமயம் துறை சார்ந்த அலுவலர்கள் கொரோனா தடுப்பணிகளை மேற்கொள்ளும் போது தங்களது உடல் நலத்தினையும் கருத்தில் கொண்டு பாதுகாப்பாக பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பது நமது தலையாய கடைமயாகும். எனவே, மாவட்டத்தில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்ளவதன் மூலம் கொரோனா தொற்றினை முற்றிலும் தவிர்த்திட முடியும்.

கொரோனா வைரஸின் தாக்கம் குறித்து பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அத்தியவசிய தேவைகளுக்காக மட்டுமே வெளியில் சென்று வருவதையும், தேவையற்ற காரணங்களுக்காக வெளியே வருவதை தவிர்க்கவும் அதனை துறை சார்ந்த அலுவலர்கள் சரிவர கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) கார்த்திகாயினி, தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை முதல்வர் மரு.இளங்கோ, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.லெட்சுமணன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெயவீரபாண்டியன், மரு.செந்தில், உதவி செயற் பொறியாளர் (பேரூராட்சிகள்) ராஜாராம், நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி (போடிநாயக்கனூர்) அசோக்குமார் (பெரியகுளம்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**